# குதூகலிக்குது கோதுமை சாகுபடி!



கேரள மாநிலம் இடுக்கி மாவட்டம் ராமக்கல்மெட்டு, பங்களாதேஸ் சாலை என்ற இடத்தில் சோதனை அடிப்படையில் கோதுமை பயிரிட்டிருக்கும் வேளாண்மையில் முதுகலைப் பட்டம் பெற்றவர் டி.எஸ்.சுரேஷ்குமார், ராமக்கல் மெட்டுவிலிருக்கும் இவர் தன்னுடைய பண்ணையில் முழுக்க இயற்கை முறையில் விவசாயம் செய்து கொண்டிருக்கிறார். ஒருங்கிணைந்த இவரின் பண்ணையத்தில் மீன்குளம், குளத்தில் வாத்துக் கூட்டம், அவற்றின் காவலுக்கு கூஸ் வாத்துகள், பசுமைக் கூடாரத்தில் மிளகாய் சாகுபடி, நேந்திரம் வாழை, வாழையைச்சுற்றி பாலிஃபிளவர், மக்காச் சோளம், தக்காளி என நிலப்பரப்பு முழுக்கவே பச்சைப் போர்வை போர்த்திக் கிடக்கிறது. அதற்கு நடுவே, அசைந்தபடி வரவேற்கின்றன கோதுமைக் கதிர்கள்.

படித்தது, வளர்ந்தது எல்லாமே குஜராத்தில் ஆகவே கோதுமையைப் பற்றி போதுமான அறிவு இருந்தது.

அரபு நாடுகுளில் பணிபுரிந்தபோது அறிவியல்பூர்வமான இயற்கை வேளாண்மையை கற்றுக் கொள்ள முடிந்தது. அந்த தைரியத்தில் தான் காபி, குறுமிளகு மட்டுமே விளைவிக்க முடியும் என்று சொல்லி அவை மட்டுமே பயிரிடப்படும் இப்பூமியில் ஒருங்கிணைந்த பண்ணையத்தைத் துவக்கினேன். இங்கே வளரும் வாத்துகளுக்கு இரவுச் சாப்பாடு கோதுமைதான். அதில் தவறி விழுந்த ஒன்றிரண்டு கோதுமை மணிகள் முளைத்து கதிர் விட்டு விளைந்து நின்றன. அப்போதுதான் கொஞ்சம் கோதுமையையும் வளர்த்துப் பார்த்தால் என்ன என்ற ஆசை முளைவிட்டது.

சோதனை அடிப்படையில் 5 சென்ட் நிலத்தை ஆள்விட்டு கொத்தி, ஆறவிட்டு, மண்புழு எரு, பண்ணைக் கழிவு உரம், பசுஞ்சாண உரம் ஆகிய மூன்றையும் மேலே தூவி, மண்ணுடன் கலந்து மேட்டுப் பாத்தி அமைத்தேன். கோதுமை விதையை வாங்குவதற்கு வெளியிலெல்லாம் அலையவில்லை. அருகிலுள்ள ரேஷன் கடையில் நல்ல கோதுமையாக ஒரு கிலோ வாங்கி வந்து விதைத்தேன். பிறகு, மண்ணைக் கிளறி விதைகளை மூடுமாறு செய்தேன். மேட்டுப்பாத்தியை

சுற்றி நெருக்கமாக வேலி போல கடுகு விதைத்தேன். பின்னர் 200 லிட்டர் தண்ணீரில் 5 லிட்டர் எலும்பு சூப் கலந்து பூவாளி கொண்டு தெளித்தேன். மீன் குளத்துநீரை கோதுமை வயலுக்குப் பாய்ச்சினேன். 5ம் நாள் கோதுமை பச்சை ஈட்டிகளாக மண்ணைத் துளைத்து வெளிவந்தன. இரவு வெப்பநிலை 12 டிகிரி செல்சியஸ் அளவிற்கு இருக்க வேண்டும்.

அதனால் பின் பனிக் காலமான நவம்பரில் விதைத்தேன். தூர்கட்டி கிளைக்கும் பருவம், பூக்கும் பருவம், மணி பிடிக்கும் பருவம் ஆகிய காலங்களில் மீன்குளத்து நீரையே பாய்ச்சினேன். களை மிகவும் குறைவு. அவற்றை வாத்துகளே கொத்தித் தின்றுவிட்டன. ஆகவே களையெடுப்பு வேலையில்லை. பூ வைப்பதற்கு முன்பாக ஒரு முறை எலும்பு சூப் தெளித்தேன். கோதுமை மணிகளின் மீது மெல்லிய உரோமம் போல் நீட்டிக் கொண்டிருப்பதால் குருவிகள், வாத்துகள் கோதுமை மணியைக் கொத்துவதில்லை. எனவே, அதன் மூலமாக இதுவரை எந்தச் சேதாரமும் இல்லை.

5 சென்ட் நிலத்திலிருந்து குறைந்தது 100 கிலோ மகசூல் கிடைக்கும். கோதுமையின் வைக்கோலை கால்நடைகளுக்குக் கொடுக்கலாம். இல்லையென்றால் அடுத்தப்பயிருக்கு மூடாக்காகப் பயன்படுத்தலாம்.

செலவு, தண்ணீர், கூலியாட்கள், உழைப்பு எல்லாமே மிகக்குறைவாகப் பயன்படுத்தப்பட்டு குறைந்த இடத்தில் விளைந்த கோதுமைச் சோதனையில் கிட்டத்தட்ட வெற்றி உறுதியாகிவிட்டது. எதிர்காலத்தில் பெரிய அளவில் நான் செய்யப்போகும் கோதுமை சாகுபடிக்கு இது முதற்படி என்று உற்சாகம் பொங்கச் சொல்லி விடை கொடுத்தார்.

இது ஒரு ஆத்ம வெள்ளாமை: சுரேஷ்குமார் பயிரிடுவது வீரிய ரக கோதுமை. அதுவும் சோதனை அடிப்படையில் ஆனால் நாட்டு ரகமான சம்பா கோதுமையை விடாமல் பல ஆண்டுகளாக பயிர் செய்து வருகிறார். தமிழகத்தின் திருப்பூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை அடுத்துள்ள கணபதிப் பாளையம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி ஜி.டி.சுப்பிரமணியம். அவரையும் சந்தித்தோம். 50 சென்ட் நிலத்தில் தகதகவென தங்க மூலாம் பூசியது போல ஒரே சீராக மானாவாரி வெள்ளாமையில் விளைந்து நிற்கிறது.

| 5 செண்ட் நிலத்தில் கோதுமை சாகுபடி வரவு செலவு | | |
|---|---|---|
| **பொருள்** | **செலவு** | **வரவு** |
| நிலம் தயாரிப்பு வேலை | 150 | |
| மண்புழு எரு, பண்ணை எரு, பசுஞ்சாணம் | 250 | |
| விதை 1 கிலோ | 8 | |
| பாசனம் | 50 | |
| எலும்பு சூப் | 50 | |
| அறுவடை செலவு | 150 | |
| எதிர்பார்க்கும் மகசூல் சுமார் 100 கிலோ, சந்தை விலை 13 ரூபாய், 100 கிலோவிற்கு | | 1300 |
| **மொத்தம்** | 658 | 1300 |
| **நிகரலாபம்** | | 642 |


**தொடர்புக்கு:**

டி.எஸ்.சுரேஷ்குமார்: 09947892496

ஜி.டி.சுப்பிரமணியம்: 9361047794

**முகவரி:**

ஜி.டி.சுப்பிரமணியம்,

கணபதிப்பாளையம்(அஞ்சல்),

பூலங்கிணறு(வழி),

உடுமலைப்பேட்டை(வட்),

திருப்பூர்(மா).